**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்**

208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை - 106.

தொலைபேசி எண் : 044 2363 5011

மின்னஞ்சல் : tnsec.tn@nic.in

---

**ந.க.எண். 26/2024-2/ஊ.தே.2, நாள் 25-07-2024**

பெறுநர்

மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் (வளர்ச்சிப்பிரிவு),

சேலம், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, நீலகிரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்.

அய்யா / அம்மையீர்,

பொருள் தற்செயல் தேர்தல்கள் - ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறைமுகத் தற்செயல் தேர்தல்கள் - ஆணையத்திற்கு அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்ட காலியிட விவரங்கள் - காலி பதவியிடங்களை நிரப்புவதற்கு தேர்தல் கூட்டம் நடத்துதல் - தொடர்பாக.

பார்வை மாவட்டங்களிலிருந்து அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்ட காலியிட விவரங்கள்.

---------

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் குறைவெண் வரம்பின்மை காரணத்தால் மறைமுகத் தேர்தல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட பதவியிடங்களுக்கும், இறப்பு மற்றும் பதவி விலகல் காரணமாக ஆணையத்திற்கு வரப்பெற்ற காலியிட விவர அறிக்கையில் ஏற்பட்டுள்ள காலி பதவியிடங்களுக்கும் கீழே குறிப்பிட்டுள்ள கால அட்டவணையின்படி மறைமுகத் தேர்தலுக்கான கூட்டத்தினை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள பதவியிடங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | தொடர்புடைய ஊராட்சி உறுப்பினர்களுக்கு மறைமுகத் தேர்தலுக்கான தேர்தல் கூட்ட அறிவிப்பு சார்வு செய்வதற்கான | 28.07.2024 |

| | | |
|---|---|---|
| | கடைசி நாள் | |
| 2. | மறைமுகத் தேர்தல் நாள் | 06.08.2024 |

2. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் பதவியிடங்களுக்கான தேர்தல் கூட்ட நடவடிக்கைகள் முற்பகல் 10.30 மணிக்குத் தொடங்கப்பட்டு நடத்தப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் பதவியிடங்களுக்கான தேர்தல் கூட்ட நடவடிக்கைகள் முற்பகல் 2.30 மணிக்கு தொடங்கப்பட்டு நடத்தப்பட வேண்டும்.

3. தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 73 (1), 91 (1) மற்றும் 94 (1)-ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களைக் கொண்டு தேர்தல் கூட்டம் நடத்திட அறிவுறுத்தப்படுகின்றது. தேர்தல் நடத்தும் அலுவலர் மறைமுகத் தேர்தல் கூட்டத்திற்கான அறிவிப்பு வெளியிடும் போது அந்த குறிப்பிட்ட பதவியிடத்திற்கான உரிய இட ஒதுக்கீட்டினை குறிப்பிட்டு வெளியிட வேண்டும். இதில் தவறுகள் ஏற்படும் நேர்வில் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர் பொறுப்பாக்கப்படுவார்.

4. மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 73(3), 91(4) மற்றும் 94 (4)-ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மறைமுகத் தேர்தல் கூட்டத்திற்கான அறிவிப்பினை குறைந்தது ஏழு முழுமையான நாட்களுக்கு முன்பாக உறுப்பினர்களுக்கு சார்வு செய்யப்பட வேண்டும் என்பதால், தேர்தல் கூட்ட அறிவிப்பினை உறுப்பினர்களுக்கு உரிய நாட்களுக்குள் உரியவாறு சார்வு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகின்றது.

5. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் கூட்டத்தினை நேர்மையாகவும், நியாயமாகவும், அமைதியாகவும் நடத்திட, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் , 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995-ல் மறைமுகத் தேர்தல்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள பிரிவு / விதிகளின்படி செயல்படவும், ஆணையத்தால் வெளியிடப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறைமுகத் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான அறிவுரைக் கையேடு (கையேடு 9)-ல் தெரிவிக்கப்பட்டவாறு செயல்படவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மேலும், பின்வரும் இனங்களையும் தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கவனத்தில் கொள்ள தக்க அறிவுரைகள் வழங்க கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(1) தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 73 (4) -ன் காப்புரை,விதி 91(5)-ன் காப்புரையின்படி ஏற்கனவே குறைவெண் வரம்பின்மை (No Quorum) காரணமாக தொடர்ந்து மூன்று தேர்தல் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்ட பதவியிடங்களுக்கு தேர்தல் கூட்டத்தினை நடத்திட தடையேதுமில்லை.

( 2 )தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 94 (5)-ன் காப்புரையின்படி கிராம ஊராட்சி துணைத் தலைவர் தேர்தல் கூட்டத்திற்கு குறைவெண் வரம்பின்மை (Quorum) கணக்கிடும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில், பெரும்பான்மையான உறுப்பினர்கள் (பாதிக்கு மேல்) வருகை புரிந்திருக்க வேண்டும். கிராம ஊராட்சித் தலைவரை கணக்கில் கொள்ளக் கூடாது. வரம்பிற்குரிய உறுப்பினர்கள் இருந்தால் அன்றி தேர்தல் கூட்டத்தினை நடத்தக் கூடாது. ஏற்கெனவே குறைவெண் வரம்பின்மை (No

Quorum) காரணமாக தொடர்ந்து மூன்று தேர்தல் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்ட பதவியிடங்களுக்கு தற்போது குறைவெண் வரம்பினை கணக்கில் கொள்ள தேவையில்லை. மேலும், தேர்தல் கூட்டத்தினை நடத்திட தடையேதுமில்லை.

(3) மேற்படி தேர்தல் விதிகளின் விதி 94 A-ன்படி கிராம ஊராட்சித் துணைத்தலைவர் தேர்தலில் தொடர்புடைய கிராம ஊராட்சியின் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் வாக்காளர்கள் ஆவார்கள்.

(4) மேற்படி தேர்தல் விதிகளின் விதி 75 (1) -ன்படி ஓர் ஊராட்சியின் மொத்த வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்து அல்லது அதற்கு குறைவாக இருக்கும் நேர்வில் மறைமுகைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் வேட்பு மனுவில் வருகை தந்துள்ள ஓர் உறுப்பினர் முன்மொழிபவராக கையொப்பமிடலாம். வழிமொழிபவர் அவசியமில்லை.

(5) மறைமுகத் தேர்தலுக்கான எந்த ஒரு வேட்பு மனுவிலும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் முன்மொழிபவராகவோ அல்லது வழிமொழிபவராகவோ கையொப்பமிடலாகாது.

(6) மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பதவியிடங்கள் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 57-ன்படி ஆதி- திராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடியினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட பதவியிடங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள், தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள், 1995, விதி 75-ல் தெரிவிக்கப்பட்டவாறு அவரது சாதி பற்றிய உறுதிமொழியினை எழுத்து மூலம் தாக்கல் செய்ய வேண்டும். மேற்படி உறுதிமொழி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறைமுகத் தேர்தல்கள் – தேர்தல் நடத்தும் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான கையேட்டில் (கையேடு 9) கொடுக்கப்பட்டுள்ளது.

(7) மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஆகிய பதவியிடங்கள் ஆதி-திராவிடர் (பொது) அல்லது ஆதி- திராவிடர் (பெண்கள்) அல்லது பழங்குடியினர் (பொது) அல்லது பழங்குடியினர் (பெண்கள்) அல்லது பெண்கள் (பொது)-க்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் நேர்வில் அப்பதவியிடங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் பதவியிடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. ஆனால் மேற்படி பதவியிடத்திற்கு போட்டியிடக்கூடிய வேட்பாளர் தொடர்புடைய பதவியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீடு சார்ந்தவராக இருக்க வேண்டும்.

(8) ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர், கிராம ஊராட்சி துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் உறுதிமொழி ஆவணம் (படிவம் 3-A) தாக்கல் செய்ய வேண்டியதில்லை.

6. மறைமுகத் தேர்தல் கூட்டத்திற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொண்டிடவும், தேவைப்படின் தேர்தல் கூட்ட நடவடிக்கைகளை முழுமையாக கண்காணிப்பு கேமரா (CCTV) மூலம் பதிவு செய்திடவும், தேர்தல் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு தக்க பாதுகாப்பு வழங்கிடவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. தேர்தல் நடைபெறும் கூட்ட அரங்கில் தேர்தல் நடத்தும் அலுவரைத் தவிர

மற்றவர்கள் கைபேசி எடுத்துச்செல்ல அனுமதிக்க கூடாது. ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் / உபகரணங்கள் (பேனா உட்பட) கூட்ட அறைக்குள் எவரும் எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது. இதனை காவல் துறை அலுவலர்கள் தக்கவாறு உறுதி செய்திட உரிய அறிவுரைகள் வழங்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. மேற்படி பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் கூட்டம் நடத்துவது குறித்து நீதிமன்றத்தால் குறிப்பான ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டிருப்பின் அதனை முழுமையாக பின்பற்றி, நீதிமன்ற ஆணைக்கிணங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்திட வேண்டும்.

9. தேர்தல் நடத்தும் அலுவலர் தேர்தல் கூட்டம் முடித்தவுடன், தேர்தல் குறித்தான முடிவறிக்கையினை மின்னஞ்சல் மூலம் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்கவும் அறிவுறுத்தப்படுகின்றது.

இணைப்பு - மேற்கண்டவாறு

BALASUBRAMANIAM
SECRETARY
25-07-2024

நகல்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைசென்னை -9
2. மாநில தேர்தல் அலுவலர் / இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை - 15
3. சட்டப்பிரிவு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை
4. கணினி நிரலர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை

கடித எண்.26/2024/ ஊ.தே.2.நாள். 25-07-2024
இணைப்பு

ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பதவியிடம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| 1 | சேலம் | கெங்கவல்லி |

ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் பதவியிடங்கள்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | காட்டாங்கொளத்தூர் |
| 2 | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை |

கிராம ஊராட்சி துணைத் தலைவர் பதவியிடங்கள்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி (வடக்கு) | ஏ. நாகூர் |
| 2 | கடலூர் | குறிஞ்சிப்பாடி | காயல்பட்டு |
| 3 | கடலூர் | மங்களூர் | பட்டாக்குறிச்சி |
| 4 | தருமபுரி | தருமபுரி | நாய்க்கன அள்ளி |
| 5 | கள்ளக்குறிச்சி | திருநாவலூர் | செம்மணங்கூர் |
| 6 | நீலகிரி | கோத்தகிரி | கோடநாடு |
| 7 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | வேங்கிக்கால் |
| 8 | திருப்பத்தூர் | நாட்றம்பள்ளி | சங்கராபுரம் |
| 9 | விழுப்புரம் | மேல்மலையனூர் | நொச்சலூர் |

BALASUBRAMANIAM
SECRETARY
25-07-2024